# 22-05-2024 செய்தி

## குறையும் கருவுறுதல் விகிதம்

- மக்கள்தொகையில் உலக அளவில் இந்தியா முதலிடத்துக்கு வந்துவிட்டது பழைய செய்தி.
- ஆனால், இந்தியாவில் மக்கள்தொகையின் வளர்ச்சிவிகிதம் முன்பை விடக் குறைவு என்பது பலரும் கவனிக்கத் தவறும் புதிய செய்தி.
- கருவுறுதல் விகிதம் ( Total fertility rate) உலக அளவில் குறைந்திருப்பினும், இந்தியா போன்ற ஆசிய நாடுகளில் தீவிரமாகக் குறைந்திருப்பது, மக்கள்தொகை வளர்ச்சியில் நிலைத்தன்மையோடு இருந்த அவற்றின் போக்கில் மிகவும் முரணான நிகழ்வு என்றே சொல்ல வேண்டும்.

**வரையறை என்ன?**

- ஒரு பெண் தன் வாழ்நாளில் சராசரியாக எத்தனை குழந்தைகளைப் பெற்றுக்கொள்கிறார் என்பதே கருவுறுதல் விகிதம்.
- இதனுடன் தொடர்புடைய சொல்லான பதிலீடு விகிதம் (Replacement level) ஒரு நாட்டில் தற்போது வாழும் குடிமக்கள் மறையும்போது அதை நிரப்பத் தேவையான மக்கள்தொகை விகிதத்தைக் குறிக்கிறது.
- ஆசிய நாடுகளில் இந்த விகிதம் வீழ்ச்சி அடைந்துவருகிறது.
- வாஷிங்டன் பல்கலைக்கழகத்தில் உள்ள ஹெல்த் மெட்ரிக்ஸ் அண்ட் எவால்யுனேஷன் என்கிற அமைப்பு, உலக அளவில் உடல்நல இழப்பு குறித்த தரவுகளைத் திரட்டுகிறது.
- உலக அளவிலான நோய்ச்சுமை குறித்த ஆய்வு என்கிற பெயரில் இவை வெளியிடப்படுகின்றன.
- லான்செட் மருத்துவ ஆய்விதழில் அண்மையில் வெளியான ஆய்வு முடிவுகள், ஆசிய நாடுகளில் கருவுறுதல் விகிதம் குறைந்திருப்பதை நிறுவுகின்றன.
- ஒரு நாட்டில் கருவுறுதல் விகிதம் 2.1 ஐ விடக் குறைவாக இருந்தால், ஒரு தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறை தொடர்வதற்குத் தேவையான குழந்தைகளைப் பெற முடியவில்லை என ஐநா அவை வரையறுக்கிறது.
- கருவுறுதல் விகிதம் மக்கள்தொகைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளால் குறைக்கப்பட்டது.
- இந்தியாவில் மக்கள்தொகை விகிதத்தைக் குறைக்கும் நோக்கில் 2.1 என்பது இலக்காக முன்பு கொள்ளப்பட்டது. இது இலக்கைவிடக் குறைவான நிலையைத் தற்போது அடைந்திருப்பதே கவலைக்குரியதாக உள்ளது.

**தாக்கம் செலுத்தும் காரணிகள்**

- இந்தியாவில் கிராமப்புறப் பெண்களிடையே கருவுறுதல் விகிதம் 2.1 ஆகவும் நகரங்களில் 1.6 விகிதமாகவும் காணப்படுகிறது.
- கல்வியறிவும் இதில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பள்ளிப் படிப்பு உடைய பெண்களின் கருவுறுதல் விகிதம் 2.8 ஆகவும் பள்ளிப் படிப்புக்கு மேல் படித்த பெண்கள் 1.8 கருவுறுதல் விகிதத்தையும் கொண்டிருப்பதாக இந்த ஆய்வு கூறுகிறது.
- பொருளாதார வசதியில் உயர்ந்த பெண்களைவிட, ஏழ்மையான பெண்களிடையே கருவுறுதல் விகிதம் அதிகமாகக் காணப்படுகிறது.
- ஏழ்மையான நிலையில் உள்ளவர்கள் 2.6 விகிதத்தையும் நடுத்தர வசதி உள்ளவர்கள் 1.9 விகிதத்தையும் அதிகப் பொருளாதார வசதி கொண்டவர்கள் 1.6 விகிதத்தையும் கொண்டுள்ளனர்.

**ஆசிய நாடுகளின் நிலை**

- சீனா 1980 களில் பின்பற்றிய கடுமையான குடும்பக் கட்டுப்பாட்டுக் கொள்கைகளால் கருவுறுதல் விகிதம் வீழ்ச்சி அடைந்தது.
- இதையடுத்து இரண்டு குழந்தைகள் பெற்றுக்கொள்ளலாம் என 2020இலும் மூன்று குழந்தைகள் பெற்றுக்கொள்ளலாம் என 2021இலும் சீனா அறிவித்திருக்கிறது.
- தென்கொரியாவில் பெண்களிடம் தோன்றிய எதிர்ப்புணர்வு, கருவுறுதல் விகிதம் குறைந்ததற்கு இன்னொரு காரணம், வீடு, அலுவலகம் இரண்டிலும் அதிக வேலைகளில் ஈடுபடுத்தப்படும் நெருக்கடியில் இருந்து விடுபட குழந்தைப் பேற்றைப் பெண்கள் தவிர்த்தனர்.
- இந்தப் போக்கு திருமணம் வேண்டாம் என்கிற மறைமுக இயக்கமாகவே மாறியது. இது கருவுறுதல் விகிதத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதை உணர்ந்த தென்கொரிய அரசு, திருமணம் செய்துகொள்ளவும், குழந்தை பெற்றுக்கொள்ளவும் ஊக்குவித்து வருகிறது.
- ஆசிய நாடுகள் கருவுறுதல் விகிதத்தை அதிகரிப்பதற்குத் தற்போது உதவித்தொகை அளிக்கின்றன, வீட்டு வாடகைக்கு அதிகத் தொகை ஒதுக்கி வைக்குமளவுக்கு ஹாங்காங்கில் செலவு அதிகம்.
- குழந்தையை வளர்க்கத் தேவையான குறைந்தளவு வீட்டு வசதிகூட அமைவது மக்களுக்குக் காரணமாக இருக்கிறது.
- இது குழந்தைப் பிறப்பில் பாதிப்பு ஏற்படுத்துவதைக் கண்ட அரசு நிர்வாகம், பிறக்கும் குழந்தைக்காக மானிய வாடகையில் வீட்டை ஏற்பாடு செய்து தருகிறது.

- சிங்கப்பூரில் பிறக்கும் குழந்தைக்காகச் சேமிப்புக் கணக்கை அரசே உருவாக்கித் தருகிறது.
- ஜப்பானில் குழந்தை உயர்கல்விப் பருவத்தை அடையும் வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**தமிழ்நாட்டின் நிலை**

- 1992-1993இல் வெளியான முதல் தேசியக் குடும்ப நல ஆய்வு, தமிழ்நாட்டில் உள்ள பெண்களின் கருவுறுதல் விகிதம் 2.5 எனப் பதிவு செய்தது.
- 2019-2021க்கான தேசியக் குடும்ப நல ஆய்வுத் தரவுகளின்படி, தமிழ்நாட்டின் கருவுறுதல் விகிதம் 1.8 ஆகக் குறைந்திருந்தது.
- இது நகர்ப்புறத்தில் 1.6 ஆகவும் கிராமப்புறத்தில் 1.9 ஆகவும் உள்ளது. 2015-2016க்கான ஆய்வுத் தரவில் கட்டப்பட்ட 1.7 என்ற விகிதத்தை விட, அடுத்த ஆய்வில் இது சற்று அதிகரித்துள்ளது.

## சுற்றுலா தரவரிசையில் இந்தியா 39-வது இடத்துக்கு முன்னேற்றம்

- உலக பொருளாதார அமைப்பு பயணம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டு குறியீடு 2024 என்ற தலைப்பில் உலக நாடுகளின் சுற்றுலா செயல்பாடுகளை தரவரிசைப்படுத்தியுள்ளது.
- இந்தப் பட்டியலில் 2021-ம் ஆண்டு 54-வது இடத்தில் இருந்த இந்தியா, தற்போது 39-வது இடத்துக்கு முன்னேறியுள்ளது.
- இந்தப் பட்டியலில் அமெரிக்கா முதல் இடத்தில் உள்ளது, அதைத் தொடர்ந்து ஸ்பெயின், ஜப்பான், பிரான்ஸ், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் உள்ளன.

## தொழில் துறையில் சமூக நீதி

- தொழில் துறையில் பட்டியல் சாதி - பட்டியல் பழங்குடி மக்களின் பங்களிப்பு பெரும்பாலும் கடைநிலைப் பணியாளர்களுக்கு உரியதாகவே இருந்துவந்த சூழலில், தமிழ்நாடு அரசு முன்னெடுத்திருக்கும் திட்டம் நம்பிக்கையளிக்கும் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.
- முதலீட்டைத் திரட்டுவது, வங்கியில் கடன் பெறுவது என ஆரம்பக் கட்டத்திலேயே அம்மக்களின் முயற்சி முடிவுக்கு வருவது வழக்கமாக இருந்துவந்த நிலையில், 2023 டிசம்பர் 6 அண்ணல் அம்பேத்கரின் நினைவு நாளன்று, அவரது பெயரிலேயே தமிழ்நாடு அரசு தொடங்கிய தொழில் முன்னோடிகள் திட்டம் இந்த மாற்றத்துக்கு வழிவகுத்திருக்கிறது.
- பட்டியல் சாதி- பட்டியல் பழங்குடி மக்கள் தொழில் தொடங்குவதற்கும் ஏற்கெனவே நடத்தும் தொழிலை விரிவுபடுத்துவதற்கும் முதலீடு கிடைக்க அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடித் திட்டம் வழிசெய்கிறது.
- இதன் மூலம் 1,303 பேர் இதுவரை முதலீட்டு மானியமாக ரூ.134,86 கோடி பெற்றுள்ளதாகத் தமிழ்நாடு அரசு அண்மையில் அறிவித்துள்ளது.
- தொழில் வளர்ச்சியின் ஊடகச் சமூக நீதியை வளர்த்தெடுக்கும் இத்திட்டம், குறுகிய காலத்திலேயே பயனாளிகளுக்கு உறுதுணை ஆகியிருக்கிறது.
- வேளாண்மையுடன் நேரடித் தொடர்புடைய தொழில்களுக்கு ஏற்கெனவே கடன் வழங்கும் திட்டங்கள் இருப்பதால், அவை தவிர, 50க்கும் மேற்பட்ட தொழில்களைத் தொடங்க இத்திட்டம் வாய்ப்பளிக்கிறது.
- சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் சூழலை இத்திட்டம் உருவாக்கியுள்ளது. இதன்படி, ஒரு தொழிலுக்கான திட்ட மதிப்பீட்டில் 35% ஐத் தமிழ்நாடு அரசு மானியமாக வழங்குகிறது.
- மீதமுள்ள 65% தொகை தேசிய வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டியில் கடனாகப் பெற்றுத் தரப்படுகிறது.
- ரூ.10 லட்சம் முதல் 1.5 கோடி வரை முதலீடாகப் பெற வட்டியை ஒழுங்காகச் செலுத்துவோருக்கு வட்டித் தொகையில் 6% திருப்பி அளிக்கப்படுவது இதன் இன்னொரு சிறப்பம்சம்.
- வங்கிக் கடனை அடைப்பதற்கு 10 ஆண்டுகள் வரை கால அவகாசம் அளிக்கப்படுகிறது.
- இத்திட்டம் அறிவிக்கப்பட்ட மூன்று மாதங்களுக்குள் 127 பேருக்கு மொத்தம் ரூ.45 கோடி முதலீடாக வழங்கப்பட்டது.
- முதல் நாளிலேயே 100 பயனாளிகளுக்கு ஒப்புதல் ஆணை கிடைத்தது. அணுகுவது, சந்தைப்படுத்துதல், அடுத்த கட்டத்தை எட்டுவது உள்பட அனைத்து நிலைகளிலும் அவர்களுக்கு வழிகாட்டுதல் வழங்கப்படுவது இத்திட்டத்தின் தொழில் நோத்திக்குச் சான்று.
- 2016இல் மத்திய அரசு கொண்டுவந்த தேசிய பட்டியல் சாதி பட்டியல் பழங்குடி மக்களுக்கான மையத் திட்டம், இம்மக்களுக்குத் தொழில் தொடங்குவதற்கான தொழில்நோக்கிலான ஒத்துழைப்புடன், அவர்களின் தயாரிப்புகளைக் கொள்முதல் செய்யவும் வழிவகுக்கிறது.
- அரசுத் துறைகள் சார்பில் நடைபெறும் கொள்முதல்களில் சிறு-குறு நடுத்தரத் தொழில்முனைவோரின் உற்பத்திப் பொருள்களுக்கு 25 சதவீதமும் அவர்களில் ஒடுக்கப்பட்ட பிரிவினருக்கு 4 சதவீதமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- அத்தகைய கொள்முதல் வாய்ப்புகள், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடித் திட்டத்திலும் வலுவாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
- 1,303 பயனாளிகளில் 288 பேர் பெண்கள் என்பது திட்டத்தின் செயல்பாட்டை இன்னும் அர்த்தம் உள்ளதாக்குகிறது.
- தொழில் துறையிலும் சமூக நீதியைச் செயல்படுத்தும் தமிழ்நாட்டு அரசின் பயணம் சிறக்கட்டும்.

## கையால் கழிவு அகற்றுவோர்: முழுமையாக மீட்கப்பட வேண்டும்

- கையால் கழிவு அகற்றும் தொழிலில் ஈடுபடுத்தப்படுவோர் பணி செய்யும்போது இறந்தாலோ, கடுமையாக ஊனமுற்றாலோ, தலைமைப் பொறுப்பில் உள்ள அதிகாரிகள், நகராட்சி ஆணையர், பஞ்சாயத்துத் தலைவர் போன்றோர் மீது குற்றவியல் வழக்கு பதிவுசெய்யப்பட வேண்டும்.
- ஆனால், கீழ் மட்டப் பணியாளர் அல்லது ஒப்பந்ததாரின் கூலி வேலையாள் மீதுதான் முதல் தகவலறிக்கை (FIR) பதிவு செய்யப்படுகிறது.
- இது மிகவும் வருந்தத்தக்கது. கையால் கழிவு அகற்றும் இந்த அவலம் 2026 ஆம் ஆண்டுக்குள் ஒழிக்கப்பட வேண்டும் - சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சஞ்சய் வி. கங்காபூர்வாலா, நீதிபதி ஜே. சத்யநாராயணா அடங்கிய இரு நபர் அமர்வு சமீபத்தில் அளித்த தீர்ப்பில் தெரிவித்த கருத்து இது.
- கையால் கழிவு அகற்றுவோர் (Manual Scavengers) என்ற சொற்றொடர் இந்தியாவில் மட்டுமே பயன்பாட்டில் உள்ளது என்று விக்கிப்பீடியா தெரிவிக்கிறது.

**பொய் அறிக்கைகளும் உண்மையும்**

- சாக்கடைகளைத் தூய்மைப்படுத்தும்போது ஐந்து நாள்களுக்கு ஒருவர் உயிரிழக்கிறார் என தேசிய சஃபாய் கரம்சாரிகள் ஆணையம் (National Commission for Safai Karamcharis) சில ஆண்டுகளுக்கு முன் தெரிவித்தது.
- இவை அரசு செய்யும் கொலைக் குற்றம் என்கிறார், இந்தக் கேவலத்துக்கு எதிராக வாழ்நாள் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் பெஸவாடா வில்சன்.
- ஏனெனில், நாட்டின் ஏராளமான மாவட்டங்கள் தங்கள் பகுதிகளில் இந்த அவலம் ஒழிக்கப்பட்டுவிட்டதாகப் பொய் அறிக்கை அளித்திருக்கின்றன.
- தேசிய சஃபாய் கரம்சாரிகள் ஆணையம், 1993இல் இருந்து, 2022 வரை 1,054 பேராவது மலக்குழியில் இறந்திருக்கின்றனர் என்கிறது.
- இப்பணியில் உயிரிழப்பவர்களின் சராசரி வயது 32 என்று 2017-2018 ஆண்டு புள்ளிவிவரங்கள் அடிப்படையில் இந்த அமைப்பு சொல்கிறது.
- மத்திய அரசின் ஒரு கணக்கின்படி 1993-2021 வரை 971 பேர் சாக்கடைகள், கழிவுநீர்த் தொட்டிகளைச் சுத்தம் செய்யும்போது உயிரிழந்திருக்கிறார்கள்.
- இந்தியாவில் 1,80,657 குடும்பங்கள் கைகளால் கழிவெடுக்கும் தொழிலில் ஈடுபட்டிருப்பதாகச் சமூகப் பொருளாதார சாதிக் கணக்கெடுப்பு, 2011 (Socio Economic Caste Census 2011) சொல்கிறது.

**சட்டங்கள் சொல்வதென்ன?**

- முதலாவது, கைகளால் கழிவு அகற்றுபோர் பணி நியமித்தல், உலர் கழிப்பறைகள் கட்டுதல் தடைச் சட்டம், 1993 இந்தச் சட்டத்தை மீறுவோருக்குச் சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட வேண்டும்.
- 20 ஆண்டுகளில் இந்தச் சட்டத்தின்கீழ் ஒருவரும் தண்டிக்கப்படவில்லை என்பதுதான் வேதனை.
- ஆகவே, இந்தச் சட்டம் திருத்தப்பட்டு, கையால் கழிவு அகற்றுவோரைப் பணியமர்த்துதலைத் தடை செய்யும் சட்டம்-அவர்களுக்கான மறுவாழ்வுச் சட்டம், 2013

  (Prohibition of Employment as Manual Scavengers and their Rehabilitation) கொண்டுவரப்பட்டது.
- ஆனால், இவை இரண்டுமே ஒடுக்கப்பட்டோருக்கான ஏனைய பல சட்டங்கள்போல் செயலிழந்து கிடக்கின்றன.

**பி.எஸ்.கிருஷ்ணனின் பங்களிப்பு**

- மேலே குறிப்பிட்ட இரண்டு சட்டங்களையும் உருவாக்குவதற்குப் பல ஆண்டுகள் பாடுபட்டு உழைத்தவர் மறைந்த ஐஏஎஸ் அதிகாரி பி.எஸ்.கிருஷ்ணன்.
- ஒவ்வொர் சட்டத்தை வகுப்பதற்கும் அவர் அளித்த பல பரிந்துரைகளில் ஒரு சிலவே ஏற்றுக்கொள்ளப்பட்டன.

**செய்ய வேண்டியவை**

- முதல் முன்னுரிமையாக, மற்ற நாடுகள்போல் சாக்கடை, கழிப்பறைகள், கழிவுநீர்த் தொட்டிகள் சுத்தப்படுத்தப்படும் முறை முழுமையாக இயந்திர மயமாக்கப்பட வேண்டும்.
- இத்தொழிலிருந்து இவர்கள் மீட்கப்பட்டவுடன், மாற்றுத் தொழில்களில் பணி அமர்த்தப்பட வேண்டும்.
- இத்தகைய வேலைகளைச் செய்வதற்கு யாரும் கிடைப்பதில்லை என்கிற நிலை உருவாக வேண்டும்.

## விண்வெளியில் ஆயுதங்களுக்கு தடை:

- விண்வெளியில் அணு ஆயுதங்களை நிறுவுவதற்குத் தடை விதிப்பதற்காக ரஷியாக கொண்டுவந்த வரைவுத் தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் நிராகரித்தது.
- 15 உறுப்பினர்களைக் கொண்ட கவுன்சில் அமெரிக்கா உள்ளிட்ட 7 நாடுகள் தீர்மானத்தை எதிர்த்தும், ரஷியா, சீனா உள்ளிட்ட 7 நாடுகள் தீர்மானத்தை ஆதரித்தும் வாக்களித்தன. ஸ்விட்சர்லாந்து வாக்களிப்பைப் புறக்கணித்தது.
- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதற்கு குறைந்தபட்சம் 9 வாக்குகள் வேண்டும். அந்த விதிமுறையை நிறைவு செய்யாததால் ரஷியாவின் இந்தத் தீர்மானம் தோல்வியடைந்தது.